உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 7 | 1925ஆம் மேமீ | பகுதி 5.


## தெய்வ வணக்கம்.

பற்பல கதிர்த்திர ளெனப்பரு மணிச்சுடர்
பரப்புமகு டத்தி னழகும்
பத்தர்மகி ழக்கருணை வைத்தினிது பார்க்கின்ற
பத்மநய னத்தினழகும்
உற்பன மறைப்பொருளை நற்றமிழ் முனிக்குமுன்
உணர்த்துசெவ் வாயி னழகும்
ஒழுகமிர்த நயகிரண முழுமதியு மனநாணும்
ஓராறு வதனவழகும்
பொற்பரு வதத்தினை நிகர்த்துவளர் பன்னிரு
புயத்தினழகுந் துலங்கிப்
பொங்கு வெண்ணீற்றி னழகுங்கண்டு தமியேன்
புகழ்ந்து தொழ வாழுதவுவாய்
சிற்பர சதானந்த நிஷ்கள நிராலம்ப திவ்யசுக பரிபூரண
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில் வரு
சிவகிரிக் குமாரகுருவே.

(மாம்பழக் கவிச்சிங்க நாவலர்)

# ஹிதோபதேசம்

(1) நீர் நிறைந்த குடம் தளும்புவதில்லை. சப்திப்பதுமில்லை. குறைந்த குடந்தான் தளும்பும்; சப்திக்கும். அதுபோல் நல்ல குலத்தில் உதித்த கல்விமான் கர்வமடைவதில்லை. குணங்கெட்ட கயவன் அதிகமாகப் பேசி அல்லல்பல அடைவான்.

(2) பொருள்தேட வேண்டுமென்கிற அவாவுடையவன், உறக்கம், சோம்பல், பயம், கோபம், மந்தமாயிருத்தல், ஆலோசியாமல் செய்கையைச் செய்தல் ஆகிய இந்த ஆறு தோஷங்களையும் விட்டுவிட வேண்டும்.

(3) பாடுபட்டுப் பணத்தைத் தேடவேண்டும். தேடிய பணத்தைத் தனக்கும் தன் உறவினர்க்கும் பயன்படும்படி செலவழிக்க வேண்டும். ஏழை எளியவர்க்கு உதவவேண்டும். இவ்வாறு செய்யாமல் சேர்த்து வைத்தால், தேனீக்கள் தேடிவைக்கும் தேனை, மனிதர் கொண்டுபோய் விடுவது போல், பிரயாசைப்பட்டுத் தேடியபொருளை அன்னியர் அபகரித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

(4) பொருளுடையவனை எல்லோரும் நேசிக்கிறார்கள். அவனுடைய கெட்ட குணத்தையும் பாராட்டுவதில்லை. பொருளில்லாதவனை அவனுடைய உறவினரும் விரோதித்துக் கொள்கின்றனர். இதனை ஒவ்வொருவரும் அநுபவத்தில் அறியலாம். ஆதலின், சோம்பலை ஒழித்து ஒவ்வொருநாளும் முயற்சியோடு பொருளைத் தேடவேண்டும்.

# மீராபாய்

துஷ்டர்களைச் சங்கரித்து நல்லவர்களை ஆதரிக்க அவதரித்த பரமாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் பரமபக்தி செலுத்தி நல்ல கதியை அடைந்த உத்தம ஸ்திரீரத்நம் மீராபாய் என்பவர். மீராபாய் மார்வாடா தேசத்திலே ராஜவம்சத்திலே பிறந்தார். மீராபாயின் தந்தையும் சிறந்த பாகவத சிரோமணி. ஆகையினால் அவர் தம் புதல்வி மீராபாய்க்குச் சிறுவயது முதல், ஈசுவரபக்தியில் ஈடுபட்டு நல்ல வழியில் மனஞ்செலுத்துவதற்கேற்ற நூல்களைப் போதித்து வந்தார்.

மீராபாய் நல்ல புத்திசாலி யாகையினால் தந்தை போதிக்கும் வழியில் நின்று நாளடைவில் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் முதிர்ந்த பக்தியுடையவரானார். தினந்தோறும் பக்திரஸமான கீர்த்தனங்களைப் பாடித் துதித்து ஈசுவரபஜனை செய்துவரத் தலைப்பட்டனர்.

மீராபாயின் இத்தகைய அரிய குணங்கண்டு மகிழ்ந்த தந்தை, அவரை அவர்க்குத் தக்க நாயகனைத் தேடி விவாகஞ் செய்வித்தார். மீராபாயின் திருக்கரம் பிடித்த புருஷன் கும்பராணாவென்னும் பெயர்கொண்ட ஓர் அரசர். அவர் உதயபுரியை ஆண்டுவந்தார். கும்பராணா பக்தியிற் சிறந்தவராயிருந்தது மல்லாமல் கல்வியில் பெரியவராயுமிருந்தார். ஆகையினால் மீராபாயும் கும்பராணாவும் மனமொத்து வாழ்ந்து வந்தனர்.

இப்படி யிருக்கையில் மீராபாய் அம்மையார், உதயபுரியில் தமது அரண்மனைக்கு அருகே ஸ்ரீ கிருஷ்ண

பகவானுக்கு ஓர் ஆலயங்கட்டி வைத்து, பரம பக்தியோடு அவரை முப்போதும் பூஜித்து வந்தார். நாளடைவில், மீராபாய் சிறந்த பக்தசிரோமணி யென்பது இராஜ்யமுழுவதும் பரவியது. அநேக பக்தர்கள், உதயபுரிவந்து ஸ்ரீகிருஷ்ண பகவானைத் தரிசித்துப் போவதுமல்லாமல், மீராபாயையும் தரிசித்துப் பரமபாக்யம் அடைந்ததாக மகிழ்ந்து செல்வர்.

இந்தக் காலத்தில் அக்பர் பாதுஷா அரசுபுரிந்தார். அவர் மீராபாய் பக்தசிரோமணியாய் விளங்குவதைக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க விரும்பினார். மீராபாய் இராஜபுத்ர ஸ்திரி; அக்பர் மகம்மதியர். ஆகையினால் மீராபாய் அவரைப் பார்க்க உடன்படார் என்பதை அறிந்த அக்பர், ஒரு பைராகியைப் போல் வேஷம்பூண்டு மீராபாய் கட்டிய ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலுக்குப் போனார். அங்கே மீராபாய் தம்மைப்போன்ற சில பக்த சிரோமணிகளுடனிருந்து கீர்த்தனங்கள் பாடிப் பகவானைத் துதித்து பஜனை செய்தார். அவருடைய பக்தியைக் கண்ட அக்பர் அகமகிழ்ந்து மீராபாயின் திருவடியில் விழுந்து பணிந்து, "பரம பக்த சிரோமணியாகிய தாம் எனக்குப் பரசாதனம் காட்டியருளல்வேண்டும்" என்று வேண்டினார். மீராபாய், ஸ்ரீ கிருஷ்ண பகவானைக்காட்டி "இந்த ஆதிமத்யாந்தரகிதனைப் பாடித்துதித்துப் பஜனை செய்வதே பரசாதனமளிக்கத்தக்கது" என்று மொழிந்தார். அதுகேட்டு அக்பர் மகிழ்ந்து தாமணிந்திருந்த இரத்தினமாலையொன்றை அளித்தார். மீராபாய் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்தபடியால், அக்பர் அதனைக் கிருஷ்ண பகவான்மீது போட்டுச் சென்றார்.

இவ்வாறு அக்பர் மாறுவேஷம்பூண்டு கிருஷ்ண பகவானுடைய ஆலயத்துக்குவந்து மீராபாயைக் கண்டு அவரை வணங்கிச் சென்றது சிலநாள் வரையில் ஒரு வருக்குந் தெரியாமலிருந்தது. பின் எவ்வாறோ மீரா பாயின் கணவராகிய கும்பராணுவுக்குத் தெரிந்துவிட் டது. அப்பால் அவர் ஆலயத்துக்குப் போய், அங் குள்ள சிப்பந்திகளைக்கண்டு, சென்ற சில நாட்களுக்கு முன் யாரேனும் பைராகி ஒருவர் இங்கேவந்து ஸ்வாமி தரிசனஞ்செய்து மீராபாயையும் வணங்கி இரத்தின மாலை ஒன்று அளித்துச் சென்றதுண்டா என்று விசா ரித்தார். அவர்கள் நடந்ததைக்கூறவே, கும்பராணு, இரத்தினமாலையை வாங்கிப் பார்த்து நல்லது என்று கூறிச்சென்று பின் "மீராபாய் அக்பர் பாதுஷாவுடன் ஸ்நேகம் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். 'இன் றேல் அவர் இவ்வாறு இரகஸ்யமாய் மாறுவேஷத்துடன் வந்து இரத்தினமாலை பரிசளிக்க நியாயமில்லை" என் றெண்ணி மீராபாயின்மீது கோபங்கொண்டு, "இனி மீராபாயின் முகத்தை நான் பார்ப்பதில்லை" என்று சபதஞ்செய்தார்.

இதனை மந்திரி மூலமாக அறிந்த மீராபாய் மிகவும் வருத்தமுற்று பகவானிடம் தம் குறைகூறி நொந்து கொண்டு அன்றிரவே தமது பிராணனைவிடத் துணிந்து அரண்மனைக்கருகே ஓடிய ஆற்றிலே போய் விழ யத்த னித்தார். அச்சமயம், "மீராபாய் விழாதே! பிருந்தா வனம் போ. அங்கே நீ பரோபகாரார்த்தமாய் வசித் துக்கொண்டிரு. கொஞ்சகாலத்தில் உனக்கு நன்மையுண் டாகும்" என்று அசரீரி வாக்குண்டாயது.

இதைக் கேட்டதும் மீராபாய் நிதானித்துப் பார்த்து மீண்டு இல்லத்திற்குச்சென்று பின் மறுநாளே புறப்பட்டுப் பிருந்தாவனம் போனார்.

மீராபாய், பிருந்தாவனத்திலிருந்து பரமானந்தத்துடன் நாடோறும் கீர்த்தனங்கள்பாடிப் பகவானை பஜித்து வரவே, அங்கும் ஜனங்கள்வந்து திரளாகக்கூடி மீராபாயைப் பின்பற்றி பகவத்பஜனை செய்யலாயினர். மீராபாய் உலகப்பற்றை முற்றுமொழித்துத் தம்மை வந்தடையும் எல்லோரையும் பகவத்பக்தியில் ஈடுபடும்படி செய்துகொண்டு பரம சுகமாக இருப்பது கும்பராணாவுக்குத் தெரிந்தது.

கும்பராணா இப்பொழுது தம்மனைவி குற்றமற்றவளென்பதை உணர்ந்தாராகையினால் தாம் செய்த பிழையை எண்ணி மனம் வருந்தினார். பின் அவர் மாறுவேஷம் பூண்டு பிருந்தாவனம் போய் மீராபாயைக் கண்டு அவர் திருவடியிலே பணிந்து என் குறைகள் தீரும்படி அநுக்ரகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

மீராபாய், "ஐயனே, தன்னை வணங்கும் பரமபக்தர்களுடைய குறைகளைத் தீர்த்துப் பரமுத்தியருளும் பிரபு அந்தக் கிருஷ்ண பரமாத்மாவேயல்லாமல் என் போன்றவரால் ஒன்றும் செய்யத் தக்கதில்லை. ஆதலின் அந்த தீனதயாபரமூர்த்தியை வணங்கிப் பிரார்த்தனை செய்துகொள்ளும்" என்று விடைபகர்ந்தனர்.

இதைக் கேட்டதும் கும்பராணா மகிழ்ந்து உடனே தம்முடைய நிஜரூபத்துடன் எதிர்வந்து நின்று "என்குலத்தையும் என்னையும் பரிசுத்தப்படுத்தஉதித்த

உத்தமியே, என் குற்றத்தைப் பொருட்படுத்தாதே! மன்னித்து என்னை ஏற்றுக்கொள்" என்றான்.

மீராபாய், "நாதா, அது பெரிய வார்த்தை. வேண்டாம். நம்முடைய குற்றங்களை மன்னித்து ஆட்கொள்ளும் பராபரனை இந்தச் சமயம் பிரார்த்திப்போம். அதுதான் செய்யத்தக்கது" என்று கூறிக் கீர்த்தனம் பாடிப் பகவானைத் துதித்தார். கும்பராணாவும் கீர்த்தனம்பாடிப் பகவானைத் துதித்து மகிழ்ந்தார். பிறகு இருவரும் அரண்மனைசென்று சுகமாக வாழ்ந்துவந்தனர்.

அப்பால் மீராபாய் பிருந்தாவனத்திலும் கிருஷ்ணன் கோவிலொன்று கட்டிவைத்தார். அம்மையார் ஒரு வருஷத்தில் ஆறுமாதம் கோவிலிலும் ஆறுமாதம் அரண்மனையிலும் வசித்து வந்தனர்.

இந்த உத்தம மாதரசை இமயமலைக்குத் தெற்கிலும் விந்தியமலைக்கு வடக்கிலும் கங்கையாற்றுக்கு மேற்கிலும் ஸிந்து நதிக்குக் கிழக்கிலுமுள்ள பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் இன்றைக்கும் புகழ்ந்து இவர் செய்த கீர்த்தனங்களைப் பாடிப் பகவானைத் துதிக்கிறார்கள்.

---

ஒருவன் மகா புத்திமான். அவனுடைய பிரசங்கத்தையும் அவன் எழுதும் நூல்களையும் அவன் போதிக்கும் போதனைகளையும் கேட்டு உலகத்திலுள்ளவர் மகிழ்வர். அவனிடம் பொருளில்லையானால் அவனுடைய அந்த புத்தி, உணவில்லையே உடையில்லையே என்கிற கவலையினாலே கெடும். ஆகையினால் முதலில் அறிவையும் அறிவைக்கொண்டு பொருளையும் தேடிக்கொள்ளவேண்டும்.

# ஸ்ரீ கதிர்காம மகிமை.

இது இலங்கையின் தென்பாகத்துள்ள ஒரு விசேஷ சுப்பிரமணிய ஸ்தலம்; ஏமகூடம், கதிரமலை, தகராலயம் முதலிய பல நாமங்களுடையது. ஆணவத்தை நிகர்த்த சூரபன்மாவை ஞானச்சுடர் வேற்படையினாலே சங்காரஞ் செய்யும்பொருட்டு, குமரக்கடவுள் பாடிவீடாக அமர்ந்தருளிய இடமென்று குகானுபூதிமான்கள் சொல்வர். உலகிற்கு ஒளியைத் தருகின்ற கதிர்களையுடைய சோம சூரியர்களாற் பூசிக்கப்பெற்றதலமாகையால் இது கதிர்காமமென்றாயிற்றென்பதும் பொருந்தும். இது அழிதற்பாலனவாகும் சுக துக்கங்களுக்கு இடமாகிய உலக போகங்களை முற்றத் துறந்த மகான்களுக்கு அளவிறந்த இன்ப நிலையமாகவுள்ளதுவுமாம். தனக்கு ஒப்புயர்வில்லாத கதிரமலையில் நடக்கும் அற்புதக் காட்சிகளோ அனந்தம். இமோத்கிரி முதலிய இடங்களிலிருந்து குகனடியார்கள் எத்தனையோ க்ஷேத்திரங்களைக் கடந்து கதிரமலைக்கு யாத்திரையாகச் செல்கின்றார்களென்றால், இதன் பெருமை இத்துணைத்தென்று சொல்ல யாரால் முடியும்? "காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றிக், கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி, ஞாலமாய் ஞாலமின்றி யநாதியாய் நங்கட்கெல்லாம், மூலமாய்" இருந்த முழுமுதற்பிழம்பாகிய குகப்பெருமான், இரகசியப் பொருளா யிருந்து சர்வான்ம கோடிகளுக்கும் அருள் செய்யும்பொருட்டுக் கதிர்காம க்ஷேத்திரத்தில், "அருவமுமுருவுமாகி, யநாதியாய்ப் பலவாயொன்றாய்ப், பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக், கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு"

நின்று திருவிளையாடல் புரிகுவர். எவரெவர் எந்தெந்த விதமாக நினைத்து வணங்கினும் அவரவர்க்கு அந்தந்த விதமாகத் தோன்றி யருள்செய்யும் பெருமானுக்கிதுவு மொரு திருவிளையாடல் போலும். இன்ன நிறத்தன் இன்ன குணத்த னென்று உணர முடியாமற் சுட்டுணர் வெல்லாங் கடந்து, மறைகளுக்குமெட்டாமல் நிற்கும் ஷண்முகமணி வீற்றிருக்குந் தலங்க ளெல்லாவற்றுள் ளும் இக் கதிர்காமம், மகா விசேடமுடைத்தென்பது ஸ்காந்தம் முதலிய நூல்களால் அறியக்கிடக்கின்றது. "அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங், குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறி யிறந்திங், கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னாகிச், செறிவொழி யாதுநின்ற" குகேசன் கதிர்காமத் தில் அடியார்களை அடிமை கொள்ளுந் திறனை யென் னென்று புகழ்ந்து சொல்வது! எனினும் அனந்த அற் புதங்களுக் குறைவிடமாகிய கதிர்காம க்ஷேத்திரத்திற் சிலவாண்டுகளுக்கு முன் நடந்தவோர் அற்புதத்தை இங்கே தருகின்றோம் :—

வேலன், முருகன், கந்தன், மயிலன், சுப்பன் என் னும் பெயர்களையுடைய தாழ்ந்த வகுப்பார்களாகிய பள்ளர், ஈழுவர் முதலியோரைக் கண்டாலும் பெயர் சார்பு நாடி, அவர்களை வணங்குந் தன்மைவாய்ந்த பிரா மண குலத்திலுதித்த சுப்பிரமணிய ஐயரென்பார் ஒரு வர் உளர். இவர் கதிர்காமத்துக்குச் சென்றுவந்த அடி யார்களிடம் அங்கு நடைபெறும் அற்புதங்களை அடிக்கடி கேட்கு மவாப் பூண்டவர். அப்படிக் கேட்கும்போது மெய் சிலிர்த்து மாலை மாலையாய்க் கண்ணீர் வடிப்பார். இச்சமையங்களிற் கதிர்காம அபேட்சையினால் உண்ணு

துறங்காதிருக்கினு மிருந்துவிடுவார். சுருங்கச் சொல்லு வதானல், இவருக்குக் கதிர்காமப் பைத்தியமேயன்றி வேறொன்றுமிவர் மனதிலில்லை யெனலாம். இவ்வா றிருக்கையில் கதிர்காமக் கள்வன்பேரில் ஊஞ்சற் பிரபந் தம் பாடவேண்டுமென்று பேரவாக்கொண்டு, வெகு பிரயாசையோடு மூன்று வருஷங்களில் பாடி முடித்தார். அவ்வாறு பாடிய திவ்விய ஊஞ்சற் பிரபந்தத்தைக் கதிர் காமப் பெருமான் திருச்சந்நிதானத்தில் அரங்கேற்ற வேண்டுமென்ற தலையன்பானது தூண்டுதலால், கதிர்கா மம் போகப் புறப்பட்டு அநேக காடுகளெல்லாங் கடந்து சென்று, இருபது நாட்களில் திசைமாறு வென்னு மிடத்திலுள்ள ஓர் காட்டுக்குள் வழி துறை திசை முத லியன தெரியாமற் போய்விட்டார். அவ்விடத்தில் அடர்ந்த மரஞ் செடிகளையும், புலி, காட்டானை முதலிய மிருகங்களையும், நிகம்பரர்களான வேடுவர் குழாங்களை யுந் தவிர இவர் வேறொன்றையுங் கண்டிலர். சில வேடு வர்கள் இவரைக் கண்ட மாத்திரத்தில் ஒரு புது மனுஷ னென்றெண்ணி அவரை உச்சி முதல் உள்ளங்கால் வரையும் ஏறவிறங்கப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சில வேடுவப் பெண்கள் இவரது பசி மிகுதியைக் கண்டு இனியபலகனியுங்காயும் தேனுந் தினைமாவுங்கொடுத்தார் கள். வேடர்களின் பாஷை இவருக்குக் கொஞ்சமேனும் புலப்படவில்லையாதலால், இவர் எல்லாவற்றிற்கும் சைகையினலுணர்த்தினர். அச்சமைய மங்குள்ள வேட் டுவப் பெண்களெல்லாரினும் பார்க்கச் சிறிது சுசிகர முள்ள இரண்டு வேட்டுவப் பெண்கள், இவர் மறைத்து வைத்திருந்த ஊஞ்சற் பிரபந்தத்தைச் சுட்டிக் காட்டி, அதைத் தங்களுக்குக் கொடுக்கும்படி சைகையினற்

கேட்டார்கள்! ஐயர் அழுதுகொண்டு மறுக்க, அவ்விரு
வேட்டுவப்பெண்களின் கணவனாகிய வேடன் தனது
வில்லையு மம்பையுங் காட்டிப் பயமுறுத்தினான். உடனே
ஐயர் தனதுயிருக்கு மோசம் வருமென்றஞ்சிப்போலும்,
பட்டு வஸ்திரத்துள் மறைத்து வைத்திருந்த பிரபந்தத்
தைக்காட்டினார். காட்டியதும்வேடனும்இருவேட்டுவிச்சி
களும்அதைப்பாடும்படி சைகையினாற்கேட்டார்கள்.சுவா
மி ஸந்நிதானத்திலரங்கேற்ற வேண்டிய பிரபந்தத்தை-
தான் மூன்று வருஷகாலமாகப் பாடிய பெரும் பொருளை
—இந்த நீசத்தன்மை வாய்ந்த வேடுவர் முன்பு பாடுவ
தெங்ஙனமென்று மனமுடைந்து விம்மி விம்மி யழுதார்.
மீட்டும் வேடன் பாடும்படி ஐயரை வற்புறுத்தலும்
ஐயர் ஒருவாறு மனமிசைந்து பாட ஆரம்பித்தார்·
வேடன் ஆங்கோர் மரத்திற் கட்டித்தொங்கும்படி விடப்
பட்டிருந்த அட்டாலையின் மீதேறித் தனது மனைவிய
ரிருவருந் தன்னை அணைத்துக்கொண்டு இருபக்கங்களிலு
மிருக்க உல்லாசமாக இருந்தான். ஐயரும் ஊஞ்சலைத்
தாரை தாரையாய் ஆனந்த பாஷ்பங்களைக் கொட்டிக்
கொண்டு பாடி முடித்தார். ஐயர் ஊஞ்சல் பாட ஆரம்
பித்தது முதற்கொண்டு முடிகிற பரியந்தம் அட்டாலை
ஒருவருமாட்டி யசைக்காதபடி தானாகவே அங்குமிங்கும்
ஊஞ்சல்போலாடிற்று. அதின்மீதிருந்த வேடனும் இரு
வேட்டுவச்சிகளும் ஆழ்ந்த யோக நித்திரையிலழுந்தி
னார்கள். பின்பு வேடன் துண்ணென விழித்தெழுந்து
நிலத்திற் பாய்ந்து ஐயரை மார்பிறுகத் தழுவி உச்சி
மோந்து முதுகு தைவந்து பன்முறை முத்தங்கொடுத்
துக்கொண்டிருந்தான். வேட்டுவச் சிறுமிகளும் அவ்
வாறே ஐயரை உச்சிமோந்து முதுகு தைவந்து பச்சைக்

குழந்தையை மாதா மெச்சுவது போல மெச்சினார்கள் அச்சமையம் ஐயர் கதிர்காமம் எப்போது போய்ச் சேருவேனென்று திசை தப்பி வந்த ஏக்கத்தினால் அங்கு நடந்த கருமங்களி னுட்கருத்தை அறியாமல் அவர்களைப் பார்த்துத் தான் கதிர்காமத்துக்குப் போகும் பாதையைக் காட்டித் தரும்படி கேட்டார். அவர்கள் ஐயரைக் கதிர்காம வெல்லைப்புறத்தில் விட்டு மறைந்தார்கள். ஐயர் அதிசீக்கிரமாகக் கதிர்காமஞ் சேர்ந்து மாணிக்க கங்கையிலே ஸ்நாநாதி அநுஷ்டான ஜெப தபங்களை முடித்துக்கொண்டு மாலை ஏழு மணியானதும், தாம் மூன்று வருஷ காலமாகப் பாடுபட்டுப் பாடிய ஊஞ்சற் பிரபந்தத்தை யெடுத்துக்கொண்டு கோவில் ஸந்நிதானத்தை அடைந்தார். அது போழ்து கோவிற் சிங்கள அருச்சகராகிய கற்பகனார் ஐயரிடம் வந்து இவ்விடத்தில் ஊஞ்சல் பாடி அரங்கேற்றவொண்ணாதென மறுத்தலும், ஐயர் விம்மிதராகித் தான் மூன்று வருஷ காலம் வெகு சிரமத்தோடுபாடி முடித்ததை அரங்கேற்ற விடும்படி பன்முறை இரந்து கேட்டும் கற்பகனார் உடன் பட்டிலர். இதனால் ஐயர் மனமுடைந்து, அவசமடைந்து, ஏக்குற்று, களைப்பெய்தி, ஆங்கோர் புறத்திலே துயின்றார். துயிலுதலும், அன்பர் மனத்துயரைத் தீர்த்தாட்கொள்ளுங் கலியுக வரதராகிய பால ஷண்முகமணி ஐயரது கனவில் "முன்னான்கு தோளும் முகங்களோராறிரண்டுங், கொன்னார் வைவேலுங் குலிசமு மேனைப் படையும், பொன்னார் மணிமயிலு"மாகத் தரிசனங் கொடுத்தருளி "உனது ஊஞ்சலை அரங்கேற்றுவிக்கும்படி யாம் வேட்ருபத்தோடு வந்து அட்டாலையிலமர்ந்து அங்கீகரித்தோமாகையால், நீ உனது மனக் கவலையை

யொழி'' என்றுஞ்ஞாபித்து, தமது பேரின்ப சாகரத்தி லழுந்தும்படி செய்தருளினர். ஐயர் பெற்ற பேறு வேறு யார் பெறுவர்—ஐயர் செய்த தவமே தவம்— ஐயருடைய திருவடிகளுக்கு அரோகர !!

இத்தகைய அநேகவிதமான பேரின்ப அற்புதங் களுக்கெல்லாம் உறைவிடமாகவுள்ள கதிர்காமத்தைத் தரிசிக்கும் பாக்கியம் முன் ஜென்மாந்திரங்களிற் செய்த புண்ணிய வசத்தினலே கிட்டுமென்றி மற்றொன்றினலு மாகாது. எச்சமயத்தவரும் வாய்புதைத்து நின்று அங் கீகரித்தற்குரிய கதிரைமான்மியத்தை அறிவிற் சிறியள், ஆசையிற் பெரியள், நன்னடையில்லள், நாயினுங் கடை யளாகிய என்னலறிய முடியுமோ ?

“ தாமரைக் கணுன் முதலிய பண்ணவர் தமக்கு
மேமுறைப்படு மறைக்கெலா மாதிபெற் றியலு
மோமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமுகத்து ளொன்றுமவன் றன்மையார் வகுக்கவல்லார்”

—ஸ்காந்தம்.

“ ஞானப் பெருந்துறை நாடிய சீரியர்க்கு
ஞானப் பெருந்திரை நாடாதே—மோனக்
கதியாடும் சேய்வாழ் கதிர்காமக் கங்கை
நதியாடும் பேறுளதா னல் ”

இங்ஙனம், சிங்கப்பூர் தி. காத்தாயி அம்மாள், “இந்து ஸாதன” த்திற்கு எழுதியிருக்கிறார்கள்.

சென்னை இந்துநேசன் பத்திரிகையில் வெளிவந்தது.

(30—5—25)

# உஷா அல்லது கனவிற்கண்ட காதலன்.

## (முன் தொடர்ச்சி.)

"ஒரு நாள் தெரிந்துதானே ஆகவேண்டும்" என்று சித்ரலேகை கூற, "சகி! இருவரும் காந்தர்வ முறைப்படி மணம் செய்துகொண்ட பிறகு என் தகப்பன் என்னைப் பிறனொருவனுக்கு எப்படி மணஞ்செய்து கொடுத்தல் கூடும்? ஆதலால், நாம் இதற்காகப் பயப்பட வேண்டியதில்லை" என்று உஷை கூறினாள்.

சித்ரலேகை இளவரசி சொல்லிய வசனங்களையும் கவனித்தாள்; தனது மனத்துதித்த பல விதமான எண்ணங்களையும் நன்றாகக் கவனித்தாள். ஒருவனை வரித்து, பின் எக்காரணம்பற்றியேனும் அவனைவிட்டுப் பிறனை மணத்தல் கற்புடைய மடந்தையர்களுக்கேற்றதல்லவென்றுணர்ந்தாள். பின் 'உஷா! நீ பயப்பட வேண்டாம். கடவுளருளால் உன் எண்ணம் நிறைவேறும்' என்று கூறி அவளை அனுப்பிவிட்டாள்.

அப்பால் அவள், உஷைக்கேற்ற நாயகனைக் கொண்டு வருவதற்கான மார்க்கத்தை யோசித்தறிவதிலே கவலைகொண்டாள். திரிலோக சஞ்சாரியாகிய நாரதரது ஞாபகம்வர அவள் தன் உள்ளம் பூரித்தாள்; உடனே அந்நாரத பகவானை ஸ்மரித்தாள்; பலபடியாகத் துதித்துப் பாடினாள். கன்றின் குரலைக்கேட்டுத் தாய் வருவதேபோல்வரும் நாரதமாமுனிவரைக் கண்ணுற்று ஆநந்தங்கொண்டாள். "முக்காலமும் உணர்ந்த முனிவர் பெருமானே, நான் உம்மை நினைத்ததின் கார

ணத்தை நீர் யறிந்தே யிருப்பீர். அதை எவ்வித மாகவேனும் முடித்துத் தரவேண்டும்'' என்று வேண்டி நின்றாள். நாரதர்—'மாலினி! உன் வேண்டுகோளை யுணர்ந்தேன். உஷை அநிருத்தனை வரித்தது சரியே. நான் கொடுக்கும் இப் பாதரக்ஷைகளைப் போட்டுக் கொண்டு துவாரகையை யடைந்து, உன் காரியத்தை முடித்துக் கொள்' என்று கூறி தாமணிந்திருந்த இரு பாதரக்ஷைகளையும் கொடுத்து மறைந்தார்.

பாதரக்ஷைகளைப் பெற்றுக்கொண்ட பாங்கி, அவைகளைப் பாதங்களில் தரித்துக்கொண்டாள். உடனே அவள் ஆகாயத்தில் கிளம்பினாள்; ஆகாய வழியாகவே ப்ரயாணம் செய்து த்வாரகையை யடைந்தாள். அரண் மனைக்குள் நுழையும்போது ஸ்ரீ கிருஷ்ண பகவா னுடைய சுதர்சன சக்ரம் வழிவிடாமல் தடுத்தது. அவள் நாரதரைத் தியானித்தாள். தியானித்தவளவில் அது வழிவிட்டு விலகியது. பின் அவள் உள்ளே நுழைந்து, அநிருத்தன் தூங்கும் கட்டிலுடன் அவ னைத் தூக்கிக்கொண்டு சோணிதபுரத்தில் வந்து உஷை யின் அந்தப்புரத்தை யடைந்தாள்.

---

## அத்தியாயம் 2.

அநிருத்தன் வந்து பலநாட்கள் ஆயின. உஷை யும் அவ்விளவலும் ரதியும் மதனனும்போல் ஆநந்தமாக வாழ்ந்து வந்தனர். நாட்கள் பல சென்றும் நிருதன் இதை அறியாமலே இருந்து வந்தான்; தன் மகள் ஒரு கன்னிகையாகவே யிருக்கின்றாள் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் காதலரிருவரும் ஸந்தோஷமாயிருந்து சொக்கட்டான் ஆடினர். அதைக்கண்ட பாங்கி ஒருத்தி அந்தப்புரத்தில் ஆண்மகனொருவன் இருக்கக் காரண மென்ன என்று கருதி ஆச்சரியப்பட்டாள்; அதை அரசனுக்கு அப்போதேஅறிவித்தல் நல்லறிவுடைமைக் கழகென்று நினைத்து, நிருதன் சந்நிதியை அடைந்து பயத்தால் உடல் நடுங்க, "அசுரரேறே! நான் சொல்வி யதைக் கேட்டவுடன் என்னைக் கொல்லவே கட்டளை யிடுவீரேயன்றி உயிர் பிழைக்க விடமாட்டீர். தங்க ளுடைய திருக்குமாரியாகிய உஷை தனக்கேற்ற காரியம் செய்யினும் அது தங்களுக்குக் கோபத்தையே விளை விக்கும். அந்தப்புரத்தில் அழகிய அரசகுமார னொருவன் உஷையுடன் விளையாடுகிறான்" என்றாள்.

இதைக் கேட்டதும் அரசன் சினங்கொண்டு தன்னுயிரம் புயங்களையும் குலுக்கி, "என்ன கூறினாய்? என் மகள் தன் னந்தப்புரத்தில் ஒரு தனிக் குமாரனு டன் வாழ்ந்து வருகின்றாள். ! அதுவும் எனக்குத் தெரி யாமலே! இதுவும் நம்பக் கூடியதோ?" என்று கூறிக் கண்களில் கோபக்கனல் பரக்கப் பார்த்தான். அவள் அகத்தில் அச்சங்கொண்டாளேனும் அசுரனைப் பார்த்து, "தேவதேவ! தங்களது மனம் திருப்தியடைய வேண்டு மாயின், அவ்விருவரையும் இக்கணமே சென்று காண் பது நல்லது" என்று கூறினாள். அவன் உடனே அரியாசனத்திருந் தெழுந்து உஷையின் அந்தப்புரம் சென்றான்.

குன்றினும் பெரிய கதையினைத் தன் மலையினும் பெரிய தோளின் மேற் கிடத்தி, மேல் நிலைகள் ஆடவும், கற்றூண்கள் அதிரவும் கோபாவேசத்துடன் சொல்

லும் அசுரன், பல மண்டபங்களையும், மணிக்கூடங்களையும், அரங்குகளையும் கடந்து உஷையின் அந்தப் புரத்தின் வாயிலை யடைந்தான்; உயர்வாயிருந்த பலகணியொன்றின் வழியாய் அந்தப் புரத்துள் நோக்கினான்; தனது கண்களாலேயே தன் பெண் பிறனொருவனோடு விளையாடுவதைக்கண்டான்; கண்டபின்னும் அவன் நம்பாமல் இருப்பனோ? உடனே தன் கதையைக் கீழே அடித்தான். அவனது கோபத்தைக் கண்ட அம்மண்டபமும் ஓயாது கதறுவதுபோல் எதிரொலியைக் கிளப்பி நின்றது. உடனே அங்கு அவனது ப்ரதான மந்திரி வர, "மந்திரி, படையொன்றைக்கொண்டு, மடமையை உடையாகக்கொண்டு ஒழுகும் என் குமாரியைக் கெடுத்து இங்கிருக்கும் வாலிபனை இவ்வந்தப்புரத்திலேயே கொன்று வாரும்" எனக் கட்டளை யிட்டுத் தன்னிருப்பிடத்தை யடைந்தான்.

தன் தகப்பனின் கோப முழக்கத்தைக் கேட்ட உஷை இடியரவங்கேட்ட நாகம்போல் தரையிற்சுருண்டு விழுந்தாள். அநிருத்தன் அவளை எழுப்பித் தேற்றத் தேறினாள். "நாதா! இனி நானும் நீரும் உயிர் பிழைப்பதரிது. என் தந்தை நமது இன்பமான வாழ்விற்கு ஒரு முடிவைத் தேடியிருப்பார். ஐயோ! இதுவும் என் விதியே! நான் இறப்பேன் என்ற பயம் எனக்கில்லை. நான் உம்மை அழைத்து வந்து இந்த எமனிடம் ஒப்புவிக்கப் போகின்றேனே என்று எண்ணும்போது என் மனம் பதறுகின்றது. இனி நான் என்னசெய்வேன்" என்று வருந்தினாள். "காதலீ! நீ வருந்தவேண்டாம். என்னுயிர் என்னுடலிலிருக்கும் வரையிலும் என்னை ஒருவரும் தொட முடியாது." என்று அநிருத்தன்

கூறிக்கொண்டே இருக்கையில், அந்தப்புரத்தின் கதவுகள் இடிக்கப்பட்டன. உஷை அலறினாள். அநிருத்தன் கதவை நோக்கி ஓடினான்; ஆனால் உஷை அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அவளைத் தேற்றி அப்புறம் அனுப்பிவிட்டுக் கதவின் குறுக்காக வைக்கப்பட்டிருந்த முசலம்போன்ற பெரிய தடியொன்றைக் கையிற்கொண்டு கதவையும் திறந்தான்.

கடல்மடை திறந்த வெள்ளம்போல் வீரர்கள் பலர் உள்ளே நுழைந்தனர். மள்ளர்கள் வேகமாகவரும் வெள்ளத்தைத் தட்டிகளால் மடக்கி மதகுகளில் திருப்புவதுபோல் அநிருத்தன் தன் கைத் தடியால் தன்னைநோக்கி வரும் வீரர்களை வீராவேசத்துடன் தாக்கி வெளியே போகும்படி செய்தான். அவ்வாறு செய்ததில் சிலர் கைவாள் முறிய ஓடிப்போயினர். அடியுண்டதால் வலியாற்றாது உயிர் துறந்தனர் பலர். வெகு தூரத்திலிருந்து "அடியுங்கள்! கொல்லுங்கள்!! ஒரு மனிதனையா இத்தனை பேர் சேர்ந்துகொல்லாமலிருக்கின்றீர்கள்?" என்று சிலர் வீர வொலியைக் கிளப்பினரேயொழிய அவர்கள் முன்வராமல் பின்னாகவே தங்கினர்.

இவ்வாறு ஒரு மனிதனைக் கொல்ல முடியாது பாணாசுரனால் அனுப்பப்பட்ட படை இறந்து போகவே அசுரன் கனல்கக்கும் கண்களுடன் அங்கே வந்து சேர்ந்தான். அவன் மனம் கோபத்தால் வெடிக்கும் போற் காணப்பட்டது. அவன் தன் பற்களைக் கடிப்பதால் உண்டாகும் நற நற வென்னும் சப்தத்தோடு விஷங் கக்கும் நாகங்களை யழைத்து ஏவினான். உடனே அந் நாகங்கள் விஷத்தையும் நெருப்பையும் கக்கிக்கொண்டும் மரஞ்செடிகளைச் சம்பலாய் எரித்துக்கொண்டும் சீறிக்

கொண்டும் வந்து சேர்ந்தன. நாகங்கள் வந்ததும் நிரு தன் "இவ்வற்பப்பயலைச் சென்று கட்டுக. என் கதையும் வாளும் அவனைக் கொல்ல வெட்கமடைகின்றன" என்றான்.

உடனே நாகங்கள் அநிருத்தனைப் போய்ப் பிணிக்கத் தொடங்கின. அநிருத்தன் தன்னாலானவரையிலும் பிணிக்கும் நாகங்களை நீக்கப் பாடுபட்டான். என்ன செய்தும் அவனால் ஆகவில்லை. கைகால்களை ஆட்ட இடமின்றி அவைகள் இவனை இறுகப்பிணித்தன. தானவன் தக்ஷணமே தன்னாட்களுக்குக் கட்டளையிட அவர்கள் அநிருத்தனை நீண்ட தாம்புகளால் வரிந்து சிறைச்சாலைக் கெடுத்துச் சென்றனர். அவன் கைகளுக்கு விலங்கிடப்பட்டது. பின் சிறைச்சாலையைச் சுற்றிலும் கடுங் காவல் வைக்கப்பட்டது.

இதுகாறும் உஷை மூர்ச்சையாய்க்கிடந்தாள்; சித்ரலேகை செய்த சயித்தியோபசாரத்தினால் தன் கண்களைத் திறந்தாள்; தன் காதலன் நாகங்களால் பிணிக்கப்படுவதைக் கண்டு உடல் நடுங்கித் தன் தகப்பனை யடைந்தாள்; அவன் கால்களில் விழுந்து "பிதாவே! என்னையும் இவரையும் மன்னிக்கவேண்டுகின்றேன். என்னைக் கொன்றாலும் பாதகமில்லை. இவரை விட்டுவிட வேண்டுகின்றேன். யான் அறியாமற் செய்த காரியத்தைத் தங்களைப்போன்ற பெரியோர்கள் பொறுப்பதல்லவோ அழகு? எந்தையே உம்மைக் காட்டிலும் எனக்கு நெருங்கிய பந்து யார்? நான் யாரிடம் என் குறைகளைச் சொல்லிக்கொள்ளக் கூடும்? உம்மைவிட வேறு யார் என் காரியங்களை அவ்வளவு அன்புடன் நிறைவேற்று

வார்கள்?" என்று தழதழத்த குரலில் இரங்கிவேண்டிக்கொள்ளும் தன் பெண்ணின் வார்த்தைகளைக் கவனியாமல், "தோழி! இவளை அப்புற மழைத்துச் செல்வீர்காள்! இனி இவ்வந்தப் புரத்திற்குக் கடினமான காவல் வைக்கப்படட்டும்." என்று உத்தரவிட்டுச் சென்றனன். அநிருத்தன் கிருஷ்ணனது பேரனென்று அறிந்தவுடன் பின்னுங் கோபங்கொண்டு அவனை மிகவும் வருத்திவந்தான். அநிருத்தனும் விதியை நினைத்து எல்லாவற்றையும் பொறுமையோடு பொறுத்து வந்தான். (வரும்)

டி. எஸ். நாராயண ராவ்,
மைலாப்பூர்.

---

## பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு ஒரு சீட்டு எழுதித்தந்து மருதவாணரிடமிருந்து வரட்டிகளைப் பெற்றுக் குளிரும் பசியும் தணித்துக்கொண்டு சுகமடைந்தனர். அப்பால் மழை நின்று காற்றும் அடங்கியது. பின் யாவரும் திசைகண்டு களித்துக் கப்பலைச் செலுத்திச்சென்று காவிரிப்பூம் பட்டிணத்துத் துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

மருதவாணரும் அவருடன் சென்ற பிள்ளைகளும் நெடுநாட் பிரயாணம் போயிருந்தபடியால் அவர்களுடைய தாய்தந்தையர் பெருங்கவலை யடைந்திருந்தனர். இப்பொழுது அவர்கள் துறைமுகம்வந்து சேர்ந்த செய்திகேட்டதும் யாவரும் தம்தம் பிள்ளைகளை அழைத்து

வரத் துறைமுகஞ் சென்றனர். திருவெண்காடரும் தமது மைந்தனை அழைத்துவரப் பேருவகையுடன் சென்றனர். அவர் துறைமுகத்தை நெருங்குகையில், மருதவாணருடன் கப்பற்பிரயாணம் போயிருந்த ஒரு பையன் முன்னதாக ஓடிவந்து திருவெண்காடரைக் கண்டு, "ஐயா, உமது மைந்தன் மருதவாணனுக்குச் சித்தப்ரமை ஏற்பட்டு லாபங்களை யெல்லாம் இழந்து வரட்டிகளையும் அவல் கடலைகளையும் சேகரித்து வந்திருக்கிறான்" என்று கூறிச் சென்றான்.

இதைக் கேட்டதும் திருவெண்காடர் 'என்ன விபரீதமிது! அந்தோ! ஈசா என்ன செய்வேன்' என்று மனங்கலங்கிப்பெருவருத்தத்துடன்கப்பலுக்குச்சென்று மைந்தனைத் தேடியடைந்து தழுவி முத்தமிட்டுக் கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருக வரவேற்று அழைத்துக் கொண்டுபோய் ஒரு மாளிகையில் இருக்கவைத்து வேண்டிய உபசாரங்களைச் செய்து மெய்காப்பாளர் சிலரை அங்கிருக்கப் பணித்து மீண்டும் கப்பலுக்குச் சென்று மருதவாணர் தேடிவந்த பொருள்கள் யாவை யெனக் கவனித்தனர்.

கப்பலிலே எரிமுட்டைகள் சிலவும் அவல்கடலை மூட்டைகள் சிலவும் ஒரு பெட்டியுமே இருக்கக்கண்டு வியப்பும் வருத்தமுமடைந்து அவைகளை யெல்லாம் ஆட்களின் மூலமாகத் தம் வீட்டிற்கனுப்பி வைத்துத் தாமும் வீடுவந்து சில வணிகருடனிருந்து பெட்டியைத் திறந்து பார்த்தார். அதில் ஒரு எரிமுட்டையும் ஓர் ஓலைச்சுருளுமிருக்கக் கண்டு, "பெட்டியில் இந்த எரிமுட்டை வரவேண்டிய அவசியமென்ன? ஏதாவது விசேஷமிருக்கும். இன்றேல் இதனைப்

பெட்டியில் பத்திரப்படுத்த வேண்டிய அவசியமிராது" என்று கருதி அதை உடைத்துப் பார்த்தார். அதில் ஒரு மாணிக்கமிருந்தது. அதுகண்டு மற்ற எரி முட்டைகளையும் உடைத்துப் பார்த்தார். அவைகளி லும் அவ்வாறே மாணிக்கமிருக்கக் கண்டு பரமானந்த மும் ஆச்சரியமு மடைந்து பின் அவல்கடலை மூட்டை களைப் பரிசோதித்தார். அவற்றில் பொன் பொடிகள் கலந்திருக்கக்கண்டு மகிழ்ந்து பின் ஓலையைப் பிரித் துப்பார்த்தார். அந்த ஓலை, மருதவாணர்க்கு மற்ற வணிக மாக்கள் எழுதிக்கொடுத்த ஒப்பந்தச்சீட்டா யிருக் கக்கண்டு, "என்ன விநோதமிது?" என வியந்தவ ராய், மருதவாணரோடு சென்ற பிள்ளைகளையெல்லாம் வரவழைத்து அந்த ஒப்பந்த ஓலையைக்காட்டி "இது நீங்கள் கொடுத்ததுதானே?" என்று கேட்டார்.

அவர்கள் "ஆம்" என ஒப்புக்கொண்டு தாங்கள் அவ்வாறு எழுதிக்கொடுக்கும்படி வழியில் நேரிட்ட ஆபத்தையும் தெரிவித்தனர். அப்பால் அவர்களால் அந்தப் பொருளைக் கொடுக்க இயலாதவர்களாய் மருத வாணருக்கே அடிமையாயினர்.

இவ்வாறு தன் மைந்தன் தமக்குப் பொருள்தேடி வந்தமைகருதிப் பெருமகிழ்ச்சியடைந்த திருவெண் காடர், தம்மைந்தனைக் காண வெண்ணி அவரிருக்கும் மாளிகை சென்று பார்த்தார். மாளிகையில் மருத வாணரைக் காணாமையால் அவரைப்பற்றி மெய் காப்பா ளரை விசாரித்தார். அவர்கள், "நாங்கள் இங்கேயேதான் இருக்கிறோம். அவர் எங்கே சென்றிருப்பார்? இந்த வழியைத்தவிர வேறு வழியில்லையே அவர் வெளியே போக?" என்றுகூறி விழித்தனர்.

திருவெண்காடர், "ஆகா என்ன கொடுமையிது, என் மைந்தனுக்கு என்மீது என்ன கோபமோ தெரிய வில்லையே! இந்த மாளிகைக்குக் காவல் வைத்தேனே" அதனால் கோபங்கொண்டிருப்பானோ! அந்தோ தெய்வமே! இனி இதற்கென்ன செய்வேன்!" என்றெண்ணி மனம் வருந்தியவராய்த் தம் வீட்டிற்கு வந்து, தம் மனைவியை விசாரித்தார். அவ்வம்மையார், மருதவாணன் இப்பொழுதுதான் இங்கே வந்து இந்தப் பட்டாடையையும் பெட்டியையும் கொடுத்துவிட்டுப் போஜனம் செய்து சென்றான்" என்று கூறினார்.

இதைக்கேட்டதும், திருவெண்காடர் "என்ன மாயமிது! காவலைக் கடந்து எப்படி வெளியே வந்தான்? இந்தப் பட்டாடையும் பெட்டியும் இவன் எங்கே வைத்திருந்தான்? ஏனிவ்வாறு மறைந்து சென்றான்?" என்றையுற்று நகர் நெடுகலும் தேடிப் பார்க்கும்படி ஆட்களை ஏவினர்.

இவ்வாறு மறைந்த மருதவாணர் திருவிடை மருதூர் போய் அங்கே தம்மைப் படத்தில் பூசித்துவந்த சிவசருமர் சுசீலையார் இருவரையும் அவர்கள் குடும்ப முழுவதையும் தம்முடன் ஐக்யம் செய்துகொண்டு மகா லிங்கத்தினுள் மறைந்தருளினர்.

---

## துறவறச் சருக்கம்.

### திருவெண்காட்டடிகள் திருவருள் பெற்றது.

திருவெண்காடர் ஏவிய ஆட்கள் நகரமெங்கும் தேடிப்பார்த்தனர்; மருதவாணரைக் காணாதபடியால் மீண்டுவந்து "எங்குந்தேடி அலுத்தோம். மருதவா

ணைக் காணோம்" என்றுகூறிச் சென்றனர். அப்பால் திருவெண்காடர், "என்னே விதியிது! மைந்தனை உயிருடன் பறிகொடுத்ததற்கோப்பாய் வருந்தவோ நாம் பிறந்தோம்" என்று நொந்தவராய், தம்முன் தம்மனைவி வைத்த பெட்டியைத் திறந்துபார்த்தார். அதில் ஒரு பட்டுத் துணியில் ஒருகாது அறுந்த ஊசியும் முருக்கடைந்த நூலும் ஓர் ஓலைச் சுருளுடனிருந்தன.

இவற்றைக்கண்டு வியப்படைந்த திருவெண்காடர் ஓலைச்சுருளைப் பிரித்துப் பார்க்கையில் அதில்,

"காதற்ற ஊசியும் வாராது காணும்
கடைவழிக்கே" என்று வரைந்திருக்கக்கண்டு கண்ட அவ்வண்ணமே ஆலோசித்தவாறிருந்தனர்.

(வரும்)

---

## அற்பஞானம் அனர்த்தம் விளைவிக்கும்.

எந்த வித்தையையும் ஐயந்திரிபறப், பூரணமாய் அறியவேண்டுவது அவசியம். அப்படி முழுவதையும் அறிந்து கொள்ளாமல் கொஞ்சம் தெரிந்துகொள்வது போதாது. அஃதன்றி அவ்வாறு ஒருவனுக்குத் தெரிந்திருக்கும் அரைப்படிப்பே அவனுக்குச் சிற்சில சமயங்களில் பெருந்தீங்கிழைக்கும் என்பதில் ஐயமில்லை. இதை விளக்குவதற்குப் பின்வரும் கதையைக் கூறுவோம்—

### கதை.

ஐரோப்பா கண்டத்தில் புருஷியா (Perussia) வென்று ஒரு தேசம் இருக்கிறது. அத்தேசத்தை ஆண்டுவந்த அரசர்களுள் பிரடெரிக் என்னும் பெரி

யோன் (Frederic the Great) மிகவும் பெயர் போனவன். அக்காவலன் தன் ராணுவத்தை மிகவும் சீராக வைத்திருந்தான். அதற்காக அவன் தன்னுடைய காப்புப்பட்டாளத்தை ஆறு மாதத்துக் கொருமுறை தன் எதிரில் வரச்செய்து அப்பட்டாளத்திலிருக்கும் எல்லா வீரர்களும் தனக்குத் தெரிந்தவர்களாவென்று அறிந்து கொள்வான். எவனாவது ஒரு வீரன் புதிதாகச் சேர்ந்திருப்பானாயின் அவனை நோக்கி முறையே "உன் வயதென்ன? நீ எவ்வளவு காலமாய் இச்சேனையிலிருக்கின்றாய்? உனக்குச் சம்பளமும் படியும் சரியாகக் கிடைத்துவருகின்றனவா" என்று கேட்பது வழக்கம்.?

ஒருமுறை அவ்வூரில் வழங்கிவரும் ஜர்மானிய பாஷையைக் கொஞ்சமுந் தெரிந்திராத வாலிபனொருவன் அவ்விராணுவத்தில் சேர்ந்தான். அவன் பிரான்சு தேசத்தவன். அரசனுடைய வினாக்களுக்கு உத்தரம் சொல்லுமாறு, 'இருபது வருஷங்கள் மகராஜ்'. 'ஆறு மாதங்கள் மகராஜ்'' 'இரண்டும் சரியாகவே மகராஜ்', என்னும் விடைகளை முறை வழுவாது பகரும்படி அவ்வீரனுக்கு மற்றவர்கள் கற்றுக்கொடுத்தனர். சின்னாட் சென்றதும் வழக்கப்படி தன் வீரரை விசாரிப்பதற்கு பிரடெரிக் வந்திருந்தபோது அந்தப் புதிய வீரனைப் பார்த்து வினவத்தொடங்கினான். ஆனால் வழக்கத்துக்கு மாறாக முதலில் "நீ எவ்வளவுகாலமாக இச்சேனையிலிருக்கிறாய்?" என்று கேட்க அவ்வீரன் 'இருபது வருஷங்கள் மகராஜ்' என்று கூறினான். இதைக் கேட்ட அரசன் வியப்படைந்து "அப்படியானால் உன் வயதென்ன?" என்று வினவ, வீரன் 'ஆறுமாதங்கள் மகராஜ்' என்று மொழிந்தான்.' இவ்விநோதமான மறு

மொழியைக்கேட்டு, பிரடெரிக் அடக்கமுடியாத சிரிப்புடன் "உண்மையில் நீயாவது, அல்லது நானாவது ஒரு மடையனாக இருக்கவேண்டும்" என்று கூற "இரண்டும் சரியாகவே" என்றான் வீரன். அதைக்கேட்ட அரசனுக்குச் சொல்லொணுக் கோபம் வந்துவிட, "இது வரையில் என் முன்னிலையிலேயே என்னை மடையனென்று என்னுடைய வீரர் ஒருவரும் கூறியதில்லை. இப்பொழுதுதான் உன்னால் அப்படி அழைக்கப்பட்டேன். உனக்கென்ன சித்தம் சுவாதீனத்திலில்லையோ?" என்று கேட்க, அவ்வீரன் மிகவும் பயந்து "ஐயா, எனக்கு இந்த ஊர்ப்பாஷை கொஞ்சங்கூடத்தெரியாது. மற்ற வீரர்கள் சொல்லிக் கொடுத்தபடி சொன்னேனல்லாமல் தெரிந்து உங்களை அவமானப்படுத்தவில்லை" என்று சொல்லிக்கொண்டு அரசன் பாதங்களில் விழுந்தான். அவனுடைய மூடத்தனத்தை யறிந்து அரசன் "உன்னை மன்னிக்கிறேன். ஆயினும் சீக்கிரம் ஜர்மனிபாஷையைக் கற்றுக்கொள்" என்றுகூறிப் பின்னும் "நீ ஒரு பெரிய வீரனுவாயென்று" ஆசீர்வதித்துச் சென்றான்.

மேற்கூறிய கதையில் அவ்வீரன் தன் சிற்றறிவினால் தன்னுயிரையும் இழக்கவேண்டிய நிலையில் அகப்படவேண்டி வந்தபடியால் நாம் எந்த வித்தையைக் கற்றுக்கொண்டாலும் முற்றிலும் அறியாமல் அவ்வித்தையைப் பிரயோகிக்கக்கூடாதென்று தெரிந்து கொள்கிறோம்.

---

# விநோத விஷயங்கள்.

(1) ஒரு திருடன் ஒரு பக்கிரி வீட்டுக்குத் திருடப் போனான். அந்தப் பக்கிரி வீட்டில் அவன் சமையல் செய்யும் ஒரு பானையும் அவன் போர்த்துக் கொள்ளும் கம்பிளி ஒன்றுமிருந்தன. ஆகையால் திருடன் அந்தப் பானையை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். பக்கிரி உடனே எழுந்து திருடனைத் தொடர்ந்து சென்றான். கொஞ்சதூரம் போனதும் திருடன் பின்னால் திரும்பிப் பார்த்து தன்னைத் தொடருவதைக் கண்டு " ஏ பக்கிரி! எங்கே வருகிறாய்?" என்று கேட்டான். "நான் குடியிருப்பதற்கு வேறோரிடத்திற்குப் போகிறேன். நல்ல வேளையாய் என் சோற்றுப் பானையைச் சுமந்து செல்ல நீ ஒரு கூலிக்காரனாக வந்து சேர்ந்தாய்; அதற்காக உனக்கு வந்தன மளிக்கிறேன்" என்றான். இதைக் கேட்டதும் திருடனுக்குச் சிரிப்புண்டாய் அந்தச் சோற்றுப்பானையைக் கீழேவைத்து விட்டுக் கம்பி நீட்டி விட்டான்.

(2) ஒரு திருடன் ஒரு தோட்டத்திற்குச் சென்று அங்கேமரத்திலுள்ளபழங்களைப்பறித்துத்தன் சட்டைப் பைக்குள் நிரப்பிக்கொண்டிருந்தான். இந்த நேரத்தில் அந்தத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் திடீரென்று அவனிடம் வந்து சேர்ந்து அவனைக் கைப் பிடியாகப் பிடித்துக்கொண்டு "நீ ஏன் இங்குவந்தாய்? உன்னை யார் அழைத்தது" என்றுகேட்டான். அவன், "எனக்குஇங்கே வரவேண்டுமென்கிற எண்ணமில்லை. ஆனால் ஒரு சுழல் காற்றானது என்னை இவ்விடத்துக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டது" என்றான். தோட்டக்காரன், "உன்னைத் தான் சுழல் காற்றுக் கொண்டுவந்து சேர்த்து விட்

டது. பழத்தை ஏன் பறித்தாய்?" என்று கேட்டான். திருடன், "பழத்தைக்கூட சுழல் காற்றே பறித்து விட்டது" என்று சொன்னான். தோட்டக்காரன் "இதிருக்கட்டும், அந்தப் பழத்தை உன் சட்டைப்பைக்குள் யார் போட்டது?" என்று கேட்டான். திருடன் "அதுதான் எனக்குந் தெரியாமல் வழிக்கிறேன்" என்று விநோதமாய்ப் பதிலளித்தான்.

(3)முன் காலத்தில் காஷ்மீர நகரத்தில் ஒரு மனிதன் சாமியார் வேடம் பூண்டு தன்னிடத்தில் தேவதூதன் பேசுகிறதாகச் சொல்லி ஜனங்களிடத்தில் வீண் புரட்சி செய்துவந்தான். இவனை அத்தேசத்து ஜனங்கள் அரசனிடம் கொண்டுபோய் விட்டுக் கொலை செய்ய உத்தரவாக வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அரசன் அவனைக் கொலை செய்யாமல் வைத்தியம் பிடித்திருக்க வேண்டுமென நினைத்து அவ்வூர் ஆஸ்பித்திரிக்கு அனுப்பினான். சில நாளைக்குப் பிறகு அரசன் ஆஸ்பித்திரியைப் பார்வையிடும்போது அங்கே யிருந்த சாமியாரைப் பார்த்து "இப்பொழுது உன் தேவதூதன் உன்னிடம் வந்து பேசுகிறாரா"? என்று கேட்டான். சாமியார் "ஆம் வந்து பேசுகிறார்" என்று சொன்னான். அரசன், "உன்னிடத்தில் என்ன சொல்லுகிறார்?" என்று கேட்டான். அதற்குச் சாமியார், "பிரபோ! 'உனக்கு நல்ல ஆகாரமும் ரொட்டியும் ஷர்பத்தும் கிடைக்கின்றமையால் நீ இந்த இடத்தை விட்டு அப்புறம் போகாதே என்று சொன்னார்" என விநோதமாய்ப் பதிலளித்தான்.

## வித்துவ சாமர்த்திய வசனங்கள்.

(1) ஒரு வித்துவான், வித்துவான்களுக்குப் பெரும்பாலும் இயல்பாயுள்ள தாரித்திரதசையால் நல்ல சோமன் உடுத்துக்கொள்ள முடியாமல் பல விடங்களில் கிழிந்து தையல்தைத்த பழைய வஸ்திரதாரியாக ஓரிடம் சென்றார். அவரைச் சந்தித்த ஒரு பிரபு என்ன "கவிராயரே இந்தச் சோமன் எங்கே சன்மானம் பெற்றது" என்று வினவினார். கவிராயர் பிரபுவைப் பார்த்து "ஐயா! அந்தச் சோமனுக்குத் தையல் இருபத்தேழு. இந்த என் சோமனுக்குத் தையல் கணக்கில்லை" யென்றார். கல்வி நயமறியாத பிரபு பொருள்விளங்காமல் விழிக்கவே கவிராயர், "சோமன்-சந்திரனுக்கு—தையல்—ஸ்திரீகள் இருபத்தேழு—இருபத்தேழு நக்ஷத்திரங்களும் மனைவிகளாம். என் சோமன்—என்னுடைய வஸ்திரத்துக்கு, தையல்—ஊசி நூல் கொண்டு தையல் தைத்திருத்தல், கணக்கில்லை—அளவில்லை" யென்றார். இதைக்கேட்ட பிரபு வியந்து கவிராயருக்குஆடைமுதலியன அளித்துப் பெருமைப் படுத்தினார்.

(2) ஒரு வித்வானுக்குக் காலில் வாதப் பிடிப்பா யிருந்தது. இவரிடம்வந்த மற்றொருவர் "என்ன ஐயா காலில்" என்றார். அதற்கு வித்துவான் "சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீ ராமருடைய பாதத்தை அநுமான் பிடித்திக்கிறார். அநுமானுடைய அப்பன் என் காலைப் பிடித்திருக்கிறார்." என்றார். இதன் அர்த்த மாகாமல் அவர் விழித்தார். உடனே வித்துவான் "அநுமானுடைய அப்பன் வாயுபகவானல்லவா ? அவ்வாயுபகவான் எனது காலைத் தாங்கி யிருக்கிறார்" என்றார் ! "பல்லுப்போனாலும் பரி

காசம் போகாதவிதம் போல வித்துவானுக்கு வியாதியிலும் வேடிக்கை போகவில்லை" யென்று வியந்து திரும்பினார்.

நீலலோசனி

## பலதுளி பெரு வெள்ளம்.

நல்லூர் என்ற ஓர் ஊரில் நாராயணன் என்னுமோர் பையனிருந்தான். அவன் வீட்டுக்கு எதிரில் ஒரு பிரம்மாண்டமான கட்டிடவேலை நடந்துகொண்டிருந்தது. அந்தக் கட்டிடத்தின் அமைப்பையும் அதில் வேலை செய்யும் கொத்து வேலைக்காரர்கள் செங்கல்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்குவதையும் அதன்மேல் சுண்ணாம்பு பூசுவதையும் அவன் நாள்தோறுங் கவனித்து வருவான். அதைக் கண்ணுற்ற நாராயணனது தந்தை அவனை யழைத்து "அப்பா! நாராயணா! நீ கொத்து வேலைக்காரர்களைப்பற்றி மிகவும் கவனித்து வருகிறாய் போலிருக்கிறது. என்ன எண்ணங்கொண்டு கவனித்து வருகிறாய்? அந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்கிற பிரியம் உனக்குண்டா? என்றார்.

நாராயணன்—பிதாவே! நான் அத்தொழிலைக் கற்றுக்கொள்ளப் பிரியப்படவில்லை. ஒரு செங்கல் எவ்வளவு சிறிய வஸ்து அதை ஒன்றின்மேலொன்றாக அடுக்கி இவ்வளவு பெரிய வீடு கட்டப்படுகிறதே யென்பதைப்பற்றி என் மனதில் மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. அதைப்பற்றித்தான் கவனித்து வருகிறேன்.

தந்தை—மிகவும் உண்மை, இதை ஒருபொழுதும் மறவாதே. எந்தப் பெரியவேலையும் இப்படித்தான் முடியும்.